# அறவழி
NONVIOLENCE

வெளியீடு
அறவழிப் போராட்டக் குழு
அஞ்சல் பெட்டி எண்: 2
சாவகச்சேரி

அறம் 1 மாத இதழ் ✳ 1987 பங்குனி பக்கம் 12 ✳ விலை 2-00 வழி 11


## மனிதகுலத்தை எதிர்நோக்கும் பெரும் சவால்களுக்குத் தீர்வுகள் காணப்படுமா?

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானம்—கல்வி–தொழில்நுட்பவியல் ஆகியன அபரிமிதமான முன்னேற்றத்தையும்—வளர்ச்சியையும் கண்டுள்ளன. இவை மனித குலத்துக்குப் பொதுவாக (அ) திருப்தியையும், மனநிறைவையும் கொடுத்திருக்கக்கூடும். ஆனாலும்—மனித குலத்தினை எதிர்நோக்கியுள்ள—விபரிக்கமுடியாத பிரச்சனைகள் நிறைவான. பூரணத்துவமிக்க தீர்வுகள் காணப்படாமலேயே இருக்கின்றன என்பதை மனிதகுலம் ஏற்றுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

மனித குலத்தை எதிர்நோக்கியுள்ள பெரும் சவால்கள்: — அரசியல்—சமூக வேறுபாடுகள், நோய், போரும் போர் பயமுறுத்தலும்; ஜனத்தொகைப்பெருக்கம், ஒழுக்கமுறை நெருக்கடி, சூழல் தூய்மைக்கேடு, பஞ்சம், பட்டினி, அறியாமை, மூடநம்பிக்கை என்பனவாகும்.

முன்னெப்போதும் இல்லாதவாறு, இன்று உலகில் 90 வீதமான விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், தொழில்நுட்பவியலாளர், சமூக சேவையாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மனிதகுலத்தின் முன்னேற்றம்—வளர்ச்சி—பாதுகாப்புக்கருதி, தினம் தினம் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் சராசரியாக 6000 முதல் 7000 வரையிலான கட்டுரைகள் வெளிவந்தவண்ணமுள்ளன.

ஆனால், இவ்வாறு எழுதப்படுகின்ற கட்டுரைகளை எத்தனை வீதமான மக்கள் வாசித்து, அதனை தத்தம் வாழ்க்கையில்

(7-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வா?

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு இனி இராணுவத் தீர்வைவிட வேறு வழியே இல்லை என இலங்கை அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரசின் அண்மைக் காலச் செயற்பாடுகள் மக்களுக்கு அறிவுறுத்திக்கொள்கின்றன.

ஒரு இனத்தின் மக்களை அழிப்பதன் மூலம் அவர்களது விடுதலை உணர்வை, மழுங்கடிக்கச் செய்துவிடலாம் என அரசு எண்ணி, இராணுவ நடவடிக்கைகளை மிக வேகமாகச் செயற்படுத்திவருவது வேதனையளிக்கின்ற சம்பவங்களாகும்.

போர்ப் பயமுறுத்தல்களால். நாட்டில் வாழ்கின்ற மக்கள் அனைவரது உடல், உளரீதியிலான தாக்கங்கள் பற்றியோ அன்றி அவர்களது அடிப்படை மனித உரிமைகளை கபளீகரம் செய்கின்ற நடவடிக்கைகளைப்பற்றியோ சர்வதேச மட்டங்களில் இருக்கின்ற மனிதாபிமானமுள்ளவர்கள், இன்னமும் வேடிக்கை பார்ப்போர் வரிசையில் இருந்து பார்த்துக்கொள்வது தமிழ்மக்களின் இதயங்களில் வடுக்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழ் இனத்தின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண இராணுவ நடவடிக்கைகள் எக்கட்டத்திலும் உதவமாட்டா. மாறாக, தமிழ்மக்களை அழித்து ஒழிப்பதற்கே இவை உதவும்.

இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு ஒன்றேதான் சரியான வழி என ஆலோசனை கூறித்தீர்மானம் எடுக்க உதவிய "மக்களின் பிரதிநிதிகள் என் போர்—இன—மத—மொழி, குலம் என்ற அடிப்படையில் செயல்பட்டுக்கொள்வது மனிதாபிமானமற்ற செயலாகும்.

எனவே, இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் போர்வையில். தமிழ்மக்களையும், அவர்களின் சொத்துக்களையும் அழிக்கும் அரசின் நடவடிக்கைகளை. இனியாவது, சர்வதேச சமுதாயம் உரிய வழிகளில், கண்டித்து. இனப்பிரச்சனைக்கு, அமைதித்தீர்வுகளை உடன் காண ஆலோசனைகளைக் காலதாமதமின்றி வழங்கவேண்டும்.

## மங்கையர் நல்வாழ்வுச் சிறப்பிதழ்

# அறநோக்கில்

## எண்ணங்களை மாற்றுவோம்

இன்று நாட்டைச்சுற்றி ஓர் அவலநிலை சூழ்ந் திருக்கின்றது. கொடிய இருள் பரவுவதைப்போல மக் கள் மனத்திலே எண்ண மேகங்கள் மூடியிருக்கின்றன. நோய் வாய்ப்பட்ட சமுதாயத்தின் சாயல் தென் பட்டுக்கொண்டிருக்கின்றது.

எங்கு பார்த்தாலும் ஒரு நொந்த, விரக்தி நிலை! அழுது, மடியத் தயாராக இருக்கும் ஒரு பக்குவம். எதிர்காலம் என்ற ஒன்று இல்லை என்ற மனப்போக்கு. நம்பிக்கையற்ற எண்ணம். பிடிப்பற்ற வாழ்க்கை ஓட்டம். மக்கள் எங்கோ நோக்குகிறார்கள்! எதையோ தேடுகிறார்கள்! யாரையோ எதிர்பார்க்கிறார்கள்.

ஏன் இந்த நிலை! என்ன நேர்ந்தது என்ற கேள்வி கள் நம் இதயத்தில் பெரிதாகத்தோன்றி—கவலைக் குறியாக — நம்பிக்கையற்ற தன்மையாக — திடமான முடிவுக்கோ—பதிலுக்கோ வரமுடியாமல் கேள்விகள் தொடருகின்றன!

பாவம் செய்துவிட்ட சமுதாயம் என்றோ? சபிக் கப்பட்ட மக்கள் என்றோ? ஆண்டவனுல்கூட நிரா கரிக்கப்பட்ட மக்கள் நாம் என்றோ? உலகின் கடைசி நாள் வந்துவிட்டது என்றோ? தலைவர்கள் தவறிவிட் டார்கள் எனறோ? நாம் நம்பினுல்—எண்ணினுல்—நம் பிச்சனைகள் முடிந்துவிடும். ஆனுல் அவை எம்எதிர் கால வாழ்க்கைக்கு வழி காட்டாது!

பழைய—பழைய பெருமைகளையும், வீரங்களை யும்—செபங்களையும்பற்றியே எண்ணி எண்ணித் திருப் திப்படுகின்றவர்களாக மக்கள் மாறிவிட்டார்கள். புதிய சிந்தனைகள் — எண்ணங்கள் — செயல்கள்தான் இன்று நம் சமுதாயத்துக்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுபவை.

மக்கள் மத்தியில், அதிகாரத்தைக் கண்டு அஞ் சும் மனோபாவம். ''நம்மால் முடியாது'' என்ற விரக்தி நிலை. எதிர்பதக் கருத்துக்கள், கூற்றுக்கள், எதிலும் குறை காண்கின்ற தன்மை—மக்களை நொண்டியாக்கும் பேச்சுக்கள், எழுத்துக்கள், மற்றவர்களை ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தத் தயங்கும் மனோபாவம்—மற்றவர்மீது நம்பிக்கையற்ற தன்மைகள் ஆண்டாண்டு காலமாக, சந்ததி—சந்ததியாக நிலவிவருகின்றன.

இத்தன்மைகளும்— மனோபாவங்களும், மொத்த மாக நம் சமுதாயத்தை ஆரோக்கியமற்றதாக்கிவரு கின்றது. இதனுல்தான் நம் சமுதாயம் முன்னேற்ற மடையாமல், வளராமல் இருந்துவருகின்றது.

''மனிதனின் எண்ணங்களே மனிதனை உருவாக்கு கின்றன'' என்ற புத்தரின் கூற்று இன்று உலக மொழியாகிவிட்டது. ஆனுல் நாமோ — அத்தகைய எண்ணங்களின் சொந்த வீட்டுக்காரர்களாக இருந்தும் கூட, அவலமான, ஆரோக்கியமற்ற, எண்ணங்களை வீட்டில் நிறைத்து, வளர்த்துவிட்டு கவலைப்படும் மனித உயிர்களாக மாறி வருந்திக்கொண்டிருக் கிறோம்.

நல்ல—சரியான—நம்பிக்கையான எண்ணங்களை வளர்த்துவிட்டால் சரியானபடி சிந்திக்க ஆரம்பித்து விட்டால், நம் வாழ்வு மகிழ்வுடன் அமையும் வெற்றி யால் நிறையும்சாதனைகள் சிறக்கும்.

பயன்தரும் சிந்தனைகளை மேற்கொள்வதன்மூலம் நம் சூழ்நிலையையும், சூழ்ந்திருக்கின்ற இருள் திரை களையும் மாற்றிவிடமுடியும். வெற்றிப்பாதையில் நம்பிக்கையுடன் முன்னேற முடியும்.

மனம் ஒரு தோட்டம். நாம்தான் தோட்டக் காரன். என்ன விதையைத் தேர்ந்தெடுக்கிறோம் என் பது என்னவிதமான தோட்டத்தை நாம் விரும்பு கிறோம் என்பதைப் பொறுத்ததாகும்.

எண்ணங்களே செயல்களாகப் பரிமளிக்கின்றன, எண்ணங்கள் விதைகள் அவை காற்றில் மிதக்கின் றன. எனவே நாம் நல்ல, பயன்தரும், எண்ணங் களை உள்ளே விடுவோம். நல்ல எண்ணங்களை வளர்ப் பவர்களாக நாம் மாறுவோம். எமது மனத்தில் நல்ல மனோபாவம் வளரட்டும்!

சமுதாயத்தின் நன்மை கருதியும், எமது முன் னேற்றம் கருதியும் நல்ல எண்ணங்கள்—சிந்தனைகள்— செயல்கள்—பழக்கங்களின் ஆட்சியாளர்களாக அனை வரும் மாறவேண்டும் என அறவழி எதிர்பார்க்கின் றது.

---

## "பெண்களே உலகின் கண்களே"

கல்தோன்றி மண்தோன்றுக் காலத்தில் இருந்து தமிழர் குலப்பெண்கள் தெய்வத்திற்குமேலாக மதிக்கப்பட்டவர்கள் என்பது வரலாற்று சான்று. இன் றைய 20ம் நூற்றுண்டின் இறுதிவரை தமிழர்குலப் பெண்கள் வாழத்தான் செய்கிறார்கள். ஆனுல் இற்றை வரை பெண்களுக்குரிய சம அந்தஸ்துக்கள், உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்டால் பலன் பூஜ் ஜியம்தான். (8-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மகளிருக்குத் தரமான யோசனைகள் சில....................

— பாணபத்திரன் —

காளிதாச மகாகவி கவலையில் இருந்த நாள் ''கவிதைப் பெண் ஒருத்தி கவிஞன்முன் வந்தாள்''

காலத்தால் அழியாத காவியந்தனைச் செய்த மாபெரும் கவிமன்னனே உனக்கு நான் ஒரு மொழி சொல்லுவேன் எனத் தொடங்கிய அவள் சொன்ன அறிவுரையால் மீண்டும் தலைநிமிர்ந்தான் அக்கவிஞன். அக்கிழவி தமிழ்க்கிழவி ஔவை.

செஞ்சிலுவைச் சங்கத்தைத்தொடங்கிய டூனன் என்ற தேசபக்தனின் அன்னை ஏழைகளுக்கு உதவிய விதமே அவரின் மகன் டூனனைச் செஞ்சிலுவைச் சங்கம் அமைக்க வழிகாட்டியது.

எனவே மகளிர் இன்றி சர்வ தேசியம் இல்லை. சர்வதேசத்திலும் கணக்கெடுத்துப்பார்த்தால் ஆண்களைவிட பெண்களே அதிகம். மகளிரை மதிக்காத நாடுகள் அழிவின் விளிம்பில் நிற்பன.

தமிழ் மகளிரின் எதிர்கால முன்னேற்றம்: ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குபேரன் வீட்டுப்பிள்ளை தலைமை தாங்கமுடியாது.அவ்வாறு தலைமைதாங்கினால் அத்தலைமை பரிபூரணம் ஆகாது. பெண்களின் பிரச்சனைக்கு ஆண்கள் தலைமைதாங்கக்கூடாது. கண்காணிப்பாளராகவே அவர்கள் இயங்கவேண்டும். தமிழ்ப் பெண்களுக்குச் சமத்துவம் வேண்டுமென்றால் தமிழ்ப் பெண்கள் களத்தில் நின்று போராடத்தயங்கக்கூடாது. அவ்வாறு போராடுவது என்றால் அவர்கட்குப் பிரச்சார இலக்கியம் தேவை. எனவே பெண்களால் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடக்கூடிய சஞ்சிகைகள் நடாத்தப்படவேண்டும். எனவே தமது பிரச்சனைகளைத் தெளிவுபடுத்தக்கூடிய பத்திரிகைகளை அவர்களே தொடங்கவேண்டும். பெண்களின் பத்திரிகைக்கு பெண்களே ஆசிரியராக இருக்கவேண்டும்.

வல்லரசு நிலையை அண்மித்துக்கொண்டிருக்கும் இந்தியாவில்கூடப் பெண்கள் மாடிவீடு கட்டும்போது முன்றடுக்கில் நின்று கற்கள் தூக்கி கஷ்டப்படுவதைக் காணலாம்.

ஆயிரக்காண பெறுமதிகொண்ட அழகான பட்டுச்சேலைகளை நெய்யும் இந்நாடு பெண்களுக்கு கொடுக்கும் அந்தஸ்து மிகவும் குறைவானதே! ஐம்பெரும் இலக்கியங்கள் எமது பெண்களுக்கு கதாநாயகி அந்தஸ்து வழங்கியுள்ளன. ஆனால் இன்றைய நடைமுறை வாழ்விலே தமிழ்மகளின் நிலை இழிவாகவே உள்ளது. மூன்றடுக்குமாடியில் கல்தூக்கும் நிலை இங்கு இல்லை. ஆனால் பெண்ணின் சீதனக்காசிற்கு வட்டிக் கணக்குப்பார்க்கும் மாப்பிள்ளைகள் ஏராளம்! ஏராளம்! பணமின்றி வாழவழியின்றிக் கன்னியராக மறைந்த கார்குழலார் தொகையும் அதைவிடப் பெரிதே.

எனவே மகளிர் நிதியம் ஒன்று துன்பப்படும் மகளிருக்காக ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த நிதி துன்பப்படும் மகளிருக்கு சேவைசெய்ய முன்வரவேண்டும். ஒருநாள் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை மார்க்கமாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு இளம் பெண் மணி ஒரு தட்டிவானில் தேங்காய்ச் சாக்குகள் ஏற்றிக்கொண்டிருந்தார். நீங்கள் இவ்வளவு தூரம் கஷ்டப்படுவதேன் என பிரயாணத்தின் இடையிலே நான் கேட்டேன்.

அந்தப் பெண்மணி சொன்னார்: எனது கணவருக்கு விபத்து ஒன்றில் கால் கழற்றப்பட்டுவிட்டது, பிறந்த பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக நான் இப்படி கஷ்டப்படவேண்டியுள்ளது.

இப்படி பற்பல மாதரை நான் கண்டிருக்கிறேன். இவர்கட்கு எல்லாம் மகளிர் நிதியம் உதவுமல்லவா? இந்த மகளிர் நிதியம் துன்பப்படும் பெண்களுககாக பெண்களால் இயக்கப்படவேண்டும்.

இங்கிலாந்திலிருந்து ஒரு பத்திரிகையில் பின்வருமாறு விளம்பரம் வந்திருந்தது. அந்த அழகான பெண்ணின் புகைப்படம் பக்கத்தே இடம்பெற்று இருந்தது. எனது தகப்பனருக்கு 10,000பவுண் கடன் இருக்கின்றது. அந்தக்கடனை நீக்க முன்வரும் முப்பத்து ஐந்து வயதுக்குட்பட்ட வாலிபனை நான் மணக்கத் தயாராக இருக்கிறேன்.

அந்தப் பெண்ணிற்கு ஒரு வாரத்தில் திருமணமும் ஆயிற்று. இங்கு பெண்ணை வைத்து இனம் வாங்கும் சந்தைகள் வளர்ந்து வருகின்றன. அந்தச் சந்தைகளை ஆண்களே திருமணத் தகவல் நிலையங்கள் என்ற பெயரில் நடாத்திவருகின்றனர். ஒரு பெண்ணின் பிரச்சனையை ஒரு பெண்ணே நன்கு அறிவாள்,

எனவே வாழ்வில் துன்பப்படும் பெண்களைக் கரை சேர்ப்பதற்காக பெண்களே ஒரு திருமணத் தகவல் நிலையத்தை நடாத்த முன்வரவேண்டும். இதன்மூலம் ஒரு சமூகப்புரட்சியை முன்வைக்கமுடியும் முன்னேற்றம் அடைந்த ஜப்பானில்கூடப் பெண்கள் பல வருடகாலம் கொந்தருத்து அடிப்படையில் வேலை செய்து அதன்மூலம் கிடைக்கும் பணத்தை சீதனமாகக் கொடுத்து ஒரு ஆடவரை திருமணம் செய்துகொள்கின்றாள்.

எனவே சீதனச் சந்தையைப் பெருமளவில் வீழ்ச்சியடையச் செய்வதன்மூலம் முன்னேற்றம் அடைந்த ஜப்பான் போன்ற நாடுகளையே சீர்திருத்தத் துறையில் முறியடிக்கமுடியும்.

**விழிப்புக் குழுக்கள் தேவை**

எமது கலாசாரத்தையோ பண்பாட்டையோ கொச்சையாக்கும் நிகழ்வுகளை எதிர்த்துப் போராடும் தமிழ் மகளிர் விழிப்புக்குழுக்கள் எமது மண்ணிற்குத் தேவை.

(11ம் பக்கம் பார்க்க)

# பெண்கள் ஆண்களைவிட பலவீனமானவர்களா?

—கி. பொ. மகினன்—

பெண்கள் ஆண்களைவிடப் பலவீனமானவர்கள் என்றும் இது இயற்கையிலேயே அமைந்த ஒரு விதி என்றும் ஒரு கருத்து நம் சமுதாய மத்தியிலே நிலவி வருகின்றது. அக்கருத்தினை நாம் விஞ்ஞான பூர்வமான முறையிலே ஆய்வு செய்து நோக்குவோமெனில் அது மிக மிகத் தவறான ஒரு கருத்தென்பதும் அதில் எவ்வித உண்மையுமே இல்லை என்பதும் நமக்குப் புலப்படும்.

இக்கருத்தானது நிலவுடைமை சமுதாய அமைப்பு நிலவிய காலகட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றே. நிலவுடைமைச் சமுதாயம் என்னும்போது ஏராளமான நிலங்களிற்குச் சொந்தக்காரனாக இருக்கும் ஒரு பிரபுவானவன் தன் நிலத்திலே வேலை செய்கின்ற தொழிலாளர்களின் உழைப்பின் பெரும் பகுதியைச் சுரண்டுவதற்கும், அந்நிலத்தில் குடியிருக்கும் மக்களைத் தன் சொத்துக்களாக வைத்திருப்பதற்கும் அதிகாரமளிக்கும் ஒரு அமைப்பு முறையாகும்.

எனவே அந்த அதிகாரத்தை நிலைநாட்டி எவ்வித தடைகளுமேயின்றி மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டி சுகபோகம் அனுபவிக்கச் சுலபமாக இருப்பதற்காக அம்மக்கள்மீது ஒவ்வொரு நிலப்பிரபுவுமே ஒடுக்கு முறைகளைப் பிரயோகிப்பான். இவ்வாறு ஒடுக்கு முறைகளிற்கு உள்ளாக்கப்படும் மக்களில் பெண்களே இன்னும் அதிகமான ஒடுக்குமுறைகளை அனுபவிப்பவர்கள் ஆகின்றனர்.

பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்குமுறைதான் முதல் வர்க்க ஒடுக்குமுறையாகும் என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டதுபோல. பெண்களைச் சமூக ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாக்குவதன் மூலமாக ஒட்டு மொத்தமான முழு உழைப்பாளி மக்கள் மீதும் ஒடுக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகிறது சுரண்டல் சமுதாய அமைப்புகளில்.

இந்த ஒடுக்குமுறைகளை தகர்த்தெறிந்து சுரண்டல் அமைப்பு முறைகளை முடிவிற்குக் கொண்டுவரும் நோக்குடன் ஆண்கள் பெண்கள் உட்பட இந்த உழைப்பாளி மக்கள் கிளர்ந்தெழா வண்ணம் தடுக்கப்பட்டு இந்த உழைப்பாளி மக்கள் தாமாகவே ஒடுக்கு முறைகளிற்குள் உட்பட்டுப் போகும்படி செய்வதற்கு அவர்கள்மீது உளவியல் ரீதியாகத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களைத் தோற்றுவிக்கவேண்டிய தேவையும் அந்த நிலப்பிரபுக்களிற்கு இருந்தது.

அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கருத்துக்களில் பெண்கள் மீது திணிக்கப்படுவதற்கென தோற்றுவிக்கப்பட்ட கருத்துக்களில் ஒன்றுதான் பெண்கள் ஆண்களைவிட பலவீனமானவர்கள் என்பது. பொதுவாக நிலவுடமையாளர்கள் அப்படியான உளவியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரவவிடுவதற்கு நிலவுடைமைச் சமுதாய கலைஇலக்கியங்களான புராண இதிகாசக் கதைகள், தெருநாடகங்கள் போன்றவற்றில், துணையை நாடினர்.

மேற்படி புராண இதிகாசக் கதைகள் தெருநாடகங்கள் போன்றவற்றில் காண்போர் அனைவரையும் கவரும் கட்டழகியாக ஒரு பெண் பாத்திரம் உருவாக்கப்படும். அப்பெண் பாத்திரத்தை வர்ணிக்கும் பொழுதோ, அன்றி அப்பெண் பாத்திரத்தின் உடல் அழகைப்பற்றி வெளிப்படுத்தும்பொழுதோ அவளை மெல்லிடையாள் என்றும் கொடியிடையாள் என்றும் ஒல்லியான தோற்றம் கொண்டவளாகவே அவதானிக்கும் ஒன்று. இப்படியாக பெண்ணானவள் மெல்லிய தோற்றம் கொண்டிருந்தாலே அனைவரையும் கவர்பவளாக எல்லோராலும் போற்றப்படுபவளாக இருப்பாள் என்று வலியுறுத்திப் பரப்பப்படுகிறது எனவே ஒவ்வொரு பெண்ணின் மனதிலும் தாம் ஒல்லியாக வருவதற்கு உடற்பருமனைக் குறைப்பதற்கு என்ன வழிமுறைகள் இருக்கின்றன என்ற தேடல் உணர்வு ஏற்பட்டுவருகின்றது.

அப்படி அவர்களின் உள்ளங்களில் அந்தத்தேடல் அதிகரிக்கின்ற காலகட்டத்தில் அதற்கு விடை கூறுவதுபோல ஏற்படுத்தப்படுகின்றது, இன்னொரு கருத்து அதாவது நிலவுடைமைச் சமுதாய காலத்து கலைஇலக்கிய வகைகளின் பிறிதொன்றான அறவழி நூல்களில் காட்டப்பட்டுள்ள அந்தக்கருத்தானது “உண்டிசுருக்குதல் பெண்டிர்க்கழகு” என்பதாகும். இதன் கருத்து உணவுகளைக் குறைத்து உண்ணுதலே பெண்களிற்கு அழகைத்தரும் என்பதாகும். இதன்மூலம் பெண்கள் உணவுகளைத் குறைத்து உண்பதில் அதிக ஆர்வம் காட்டத்தொடங்கிவிடுகின்றனர். எனவே பெண்கள் செயற்கையாகவே தங்கள் உடல் வலிமையையும் ஆரோக்கியத்தையும் இழந்து போகின்றனர். பின்னர் ஒரு ஆண் செய்கின்ற கடினமான வேலை ஒன்றைத் தாமும் செய்ய முனைகின்றபொழுது குறைவுபட்டுவிட்ட உடல் வலிமையின் காரணமாக தோல்வியைத் தழுவுகின்றனர். இச்சந்தர்ப்பத்தில் தாமாகவே ஆண்களைவிடப் பெண்கள் பலவீனமானவர்கள் என்ற மிகத் தவறான கருத்தை எவ்வித ஆய்வு மனப்பாங்குமின்றி ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

(11ம் பக்கம் பார்க்க)

# மணப்பெண்ணின் விலையும் சீதனமும்

**...வீ. தர்மினி**

பெற்றோர் தம் பெண்மக்களை இளைஞரான ஆண்களுக்கு மணமுடித்துக் கொடுக்கும்போது அப்பெண்களுக்கு சீதனம் கொடுக்கும் வழக்கமும் மரபும் நம் மக்களிடையே நிலவி வந்துள்ளது. மணப்பெண்ணுக்கு கொடுக்கும் சீதனம் பணமாகவும் சொத்தாகவும் நகைகளாகவும் அமைந்துள்ளது. ஒருவருடைய சமூக அந்தஸ்துக்கும் குடும்ப வருமானத்திற்கும்ஏற்ப இச்சீதனம் இருக்கும்.

இலங்கையில் சில பெற்றோர் சீதனம் கொடுப்பது மட்டுமன்றி மணமகனின் பெற்றோருக்கு கணிசமான அளவில் நன்கொடைப்பணமும் கொடுக்கிறார்கள், இந்த நன்கொடைப்பணம் மணமகனின் சகோதரியை விவாகம் செய்து கொடுப்பதிற் செலவிடப்படுகிறது, உறவினர் வெளிநாடுகளில் வசிக்குமிடத்து சீதனத்தின் அல்லது நன்கொடையின் ஒரு பகுதியைப் பெற்று அதன்மூலம் ஒரு வாகனத்தை வாங்குவதற்கோ அன்றி மணமகனின் வெளிநாட்டுச் செலவிற்கோ பயன்படுத்தும் வழக்கம் இருந்துவருகின்றது.

சில விவாகங்கள் தரகர்களால் ஒழுங்கு செய்யப்படுகின்றன. விவாகம் செய்வதற்கு சம்மதமளிக்கும் மணமகன் மணப்பெண் ஆகியோரின் பெற்றோர்களிடமிருந்து சீதனத்தில் ஐந்து சதவீத இலாபத்தை இத்தரகர்கள் பெறுகின்றார்கள். முன்பு இருந்ததைப் போன்று இலங்கையர் சாதி, சமயம், இனம் ஆகிய அடிப்படைகளைப் பெரிதும் வலியுறுத்துகின்றார்கள். சாதகம் பார்த்தலும் குடும்பப்பாரம்பரியத்தை நோக்குதலும் மூக்கிய இடம்பெறுகின்றன. இந்த முறையானது படிப்படியாக மறைந்துவருகின்றது.

பத்திரிகைகளில் திருமண விளம்பரம் பிரசுரிக்கும் வழக்கம் பெரிதும் பரவிவருகின்றது, மருத்துவர், பொறியியலாளர், கணக்கறிஞர் ஆகிய உயர் தொழில்களைச் சார்ந்தோர் திருமண விளம்பரம் செய்து, பென்னம் பெரும் சீதனங்களை அதாவது வீடு, பெருந்தோட்டம், ரொக்கப்பணம், நகைகள், நன்கொடைகள் ஆகியவற்றைக் கோருகின்றனர்.

விளம்பரம் மூலம் தொடர்புகொண்டபின் மணப்பெண்ணின் தொழில் குடும்ப அந்தஸ்து செல்வவளம் ஆகியவை மணமகனின் உயர்தொழில் அந்தஸ்துக்கும் குடும்ப அந்தஸ்திற்கும் சமனாக இருக்குமாயின் கோரப்பட்ட சீதனம் கொடுக்கப்பட்டபின் விவாகம் மிகவும் விமரிசையாக நடத்தப்படும்.

விவாகச் சந்தையிலே முடிவு செய்யும் பிரதான காரணியாக இச்சீதன முறையே தொடர்ந்து வருகின்றது. அண்மைக்காலத்தில் புதிய மாற்றமொன்று புகுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒருவனே மணமகனாக ஏற்று அவனுடைய கல்விக்கு வெளிநாட்டில் செலவு செய்து அவன் படிப்பை முடித்து நாடு திரும்பியபின் அவன் தெரிவு செய்த மணப்பெண்ணை விவாகம் செய்வதாக அவனிடமிருந்து வாக்குறுதி பெறுவதாகும். வேலைசெய்யும் பெண்களை மணமுடித்து நிலையான குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காக சில வேளைகளில் பணத்தை சேமிப்பதற்கு நிர்ப்பந்தப்படுகின்றார்கள்.

இக்கால சமூகங்களுட் பல ஒரு பெண் மண வாழ்க்கை மூலம் சட்டமுறையான மனைவியாகவும் தாயாகவும், இருந்து தனது பெண்மைப் பங்கை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கின்றன.

இக்காலச் சமுதாயத்திலே பெண்களின் நிலையானது, மணம் செய்விக்கும் இலக்கை நோக்கியே முற்றாகப் பெண்கள் வளர்க்கப்படுகின்றார்கள் என்னும் உண்மையால் பெரிதும் இடர்ப்பாட்டுக்கு உட்பட்டுள்ளது.

திருமண வயது வந்த சில பெண்கள் சுதந்திரமுடையவர்களாக இருக்க விரும்புவதுடன் நாம் வயது முதிர்ந்த பெண்களாகிவிடுவோம் என்ற அச்சம் காரணமாக இளம்பருவத்திலே குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டுமெனவும் விரும்புகின்றார்கள். பெற்றோர் இல்லாத சூழலில் தமக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் தேவை என்று அவர்கள் உணருகின்றார்கள். அப்பெண்கள் திருமணம் முடிந்ததும் பெற்றோரின் கட்டுப்பாட்டை விட்டு நீக்கி கணவரிலே தங்கியிருக்கின்றார்கள்.

சீதனமுறை பல வழிகளிலே பெண்களை அடிமையாக்குகின்றது. அது திருமண ஒப்பந்தத்தை மணம் செய்வதற்கு சீதனம் கொடுக்கவியலாத எளிய பெண்களில் குடும்பங்களுக்கும் பெற்றோருக்குமிடையே ஒரு வியாபார நடவடிக்கையாக மாறிவிடுகின்றது. பெண குழந்தைகளுக்குச் சீதனம் தேடிப்பெறவேண்டியிருக்கும் குடும்பங்களில் ஒரு பெண்குழந்தையின் பிறப்பு ஒரு பொருளாதாரச் சுமையாகின்றது.

சீதன முறை ஒழிக்கப்படவேண்டும். ஆண் மக்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும், சொத்துக்கான சமனான மரபுரிமை பற்றிய உரிமை புகுத்தப்படவேண்டும். பெண்ணொருத்தி தனது சொத்துடமையை எவ்வகையான தடையுமின்றித் தான் விரும்பும் முறையிற் பயன்படுத்துவதற்கு அவளுக்குப் பூரண உரிமை வழங்கப்படவேண்டும்.

( 11ம் பக்கம் பார்க்க )

# ஈழப்பெண்களின் எதிர்காலம்

இன்று எமது மண்ணிலே ஆண்களைவிட பெண்கள் தொகை அதிகரித்துள்ளது, அதிகரித்துள்ளமைக்கான காரணங்கள் பல. முக்கியமாக எமது மண்ணிலே இயற்கையாகவே பெண்கள் தொகை அதிகம். அடுத்ததாக இன்று எமது இளைஞர்கள் பலர் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வருகின்றனர். பல இளைஞர்கள் ஈழவிடுதலைக்காக தம் இன்னுயிர்களைக் கொடுத்திருக்கின்றார்கள். கொடுத்தும் வருகிறார்கள், பல இளைஞர்கள் உயிர்களுக்கு பயந்து கோழைத்தனமான முடிவோடு வெளிநாடுகள் சென்றுவிட்டனர், மேலைத்தேய நாகரீகங்களுக்கு மயங்கி அங்குள்ள பெண்களையே திருமணம் செய்துகொண்டுவிட்டனர். பலர் இதனால் ஆண்கள் தொகை குறைந்து பெண்கள் தொகை கூடியுள்ளது, எனவே எமது பெண்களின் எதிர்காலத்தைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியுள்ளது. இதற்கு சகல மக்களும் உணர்ந்து செயல்படவேண்டும்.

"ஒருவனுககு ஒருத்தி" என்பதே தமிழ் கலாசார சமயப் பண்பாடு. இந்த முதுமொழி பழைய காலத்திலேயே இருந்தது. தமிழ் மக்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஒரு சிலர் இதனை உதாசீனம் செய்து இந்தப் பழமொழிக்கு மாறாகநடந்து வருகின்றனர் என்பது காணக்கூடியதாக இருக்கிறது. இந்த முதுமொழியை எமது தற்போதைய காலத்திலே மாற்றவேண்டியுள்ளது, எமது ஈழப் பெண்களுடைய திருமணத்தை எடுத்துக்கொண்டால் இன்றைய காலகட்டத்திலே அது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. எமது பெண்களுக்கு திருமணம் புரிவதற்கு தமிழ் இளைஞர்கள் குறைவாகவே உளளனர். இப்பிரச்சனையை தீர்க்க பல வழிகள் உண்டு.

முதலாவதாக சாதிமதம் பாராது பெற்றோர்கள் நமது பெண்களுக்கு திருமணம் செய்யவேண்டும். "சாதி இரண்டொழிய வேறில்லையென்றே தமிழ் மகள் சொல்லிய சொல் அமிர்தமென்போம்" என்று பாடுகிறான் புரட்சிக்கவி பாரதி. இன்று எமது மண்ணிலே சாதி என்பது ஒவ்வொருவருடைய இரத்தத்திலும் ஊறி இருக்கிறது என்றே கூறலாம். பாரதியின் படத்திற்கு பூமாலை இட்டு பூசை செய்வார்கள். பின்பு சாதியினால் உலகையே சாக்கடை ஆக்கிடுவார்கள். என்னப்பா உலகமிது! சாதி, சாதி என்று எதனைத்தான் சாதித்தனரோ? பாரதி எப்படிப் பாடினாலும் இந்தப் பாழ்பட்ட உலகம் திருந்தாது. சாதி ஒரு மூடக்கொள்கை ஆகும். சாதியில் நாங்கள் உயர் சாதி என்று கூறியவர்கள் இன்று வீதி வழியே நாயாகத் திரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே சாதி என்ற மாயப்பேயை விரட்டி, பெற்றோர்களே! பெண்களின் உணர்ச்சிகளைப் புரிந்து அவர்களுக்கு உரிய வயதில் திருமணத்தை நடத்துங்கள். பாரபட்சம் என்ற இழிநிலையுடன் கூடிய தற்போதைய அரசியல்-சமூக-பொருளாதார காரணிகள் நம் சமூகத்தில் ஆண்கள் வீதத்தை வீழ்ச்சியுறச் செய்திருப்பது ஈழப்பெண் இனத்திற்கு பெரும் புயலுடன் பேய் மழையும் சேர்ந்ததுபோல் உள்ளது.

அடுத்ததாக கலப்பினத் திருமணமுறையையும் நடைமுறைப்படுத்தலாம். உதாரணமாக தமிழ் மணமகனும் முஸ்லீம் மணமகளும் திருமணம் புரியலாம். இதன்மூலம் தமிழ்பேசும் மக்களிடையே சகோதரத்துவ சமத்துவ ஒற்றுமை நிலவும்.

அடுத்து பெற்றோர்கள் பணம், பதவி மோகத்தை விடவேண்டும். ஒரு தாய் தன் மகளுக்கு வைத்தியர் தான் மணமகனாக வரவேண்டும் என எதிர்பார்க்கிறாள். ஒரு சிந்தனையாளன் வரவேண்டும் என அவள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அந்தத்தாய் வைத்தியரை மணமகனாக விரும்பும்போது அவன் சீதனத்தை எதிர்பார்க்கிறார். இந்த சீதனமுறை பெண்கனாலேயே தொடக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. இன்று தமிழ் சமூகத்திலே திருமணம் ஒரு "வியாபார ஒப்பந்தம்" என்று அந்நியர் கிண்டலாகப் பேசிக்கொள்வதில் நிறைய உண்மை இருக்கின்றது எனவே இனியாவது வெளிப்புற பகட்டையும் போலிக் கௌரவங்களையும் அவற்றிலுள்ள மோகத்தையும் உதறித் தள்ளிவிட்டு தம்முடைய பெண்பிள்ளைகளை காப்பாற்றக்கூடிய சாதாரண ஆண்மகனுக்கு தம் பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்க முன்வரவேண்டும். இம்மனமாற்றம் விகிதாசாரப் பிரச்சனையின் தாக்கத்தை ஓரளவு குறைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே பெண்களுடைய எதிர்காலத்தை மேற்குறிப்பிட்டவைமூலம் நடைமுறைப்படுத்தினால் இலகுவாகத் தீர்க்கலாம். இதற்கு தமிழ்பேசும் மக்கள் யாவரும் உறுதி மனப்பான்மையுடன் செயற்படவேண்டும். பெற்றோர்களின் உறுதிச் செயற்பாட்டிலேயே பெண்களின் எதிர்காலம் இருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை.

# முன்னேற வழி

சிறிய விஷயங்களுக்காக மனக்கலக்கம் அடையாதீர்கள். ஒத்துப்போகும் தன்மையையும், இனிய பண்புகளையும் வளருங்கள். பிறர் உங்கள் தவறுகளைச் சுட்டிக் காட்டினால் அவற்றை ஒத்துக் கொள்ளுங்கள். தவறுகளைத் தவிர்க்க முயலுங்கள். தவிர உங்கள் தவறுகளைக் சுட்டிக் காட்டும் நபருக்கு நன்றி செலுத்துங்கள். அப்பொழுதுதான் நீங்கள் முன்னேற முடியும்.

## மணப்பெண்ணின்.........

( 5ம் பக்கத் தொடர்ச்சி )

பொருள் வசதியுள்ள பெற்ருேர் தம் வருங்கால மருமகனுக்கு காசாகவோ பொருளாகவேய அன்றி இருவழிகளிலுமோ தமது பொருள்வளத்திற்கேற்ப கொடுப்பது இயல்பு, இதன்மூலம் அம்மணமகன் தனது இல்லற வாழ்க்கையைத் தொடங்கும்போது உண்டாகும் பொறுப்புகளையும் உள்ள உறுதியோடு தாங்கிக்கொள்வதற்கான வாய்ப்பையும் உற்சாகத்தையும் பெறுவான்

இக்காலத்தில் பெண்கள் விடுதலை பெற்றவர்களாய் ஆண்மக்களோடு கணிசமானவராக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சீதனம் கோருவது ஒவ்வாத ஒரு செயலாகத் தோன்றுகின்றது. சீதனத்தை நாடாத ஒருவன் தலைநிமிர்ந்து பெருமையாக நடக்கத்தக்கவனுகவும் வீட்டுக்கு எசமானுகவும் இருப்பான். அவன் தன் மனைவியின் செல்வத்திற்காகவன்றி அவளுடைய உண்மையான அன்புக்கும் அருங்குணங்களுக்குமாக அவளை மணம் செய்தவனுகக் கருதப்படுவான்.

நம் நாட்டில் சனத்தொகையில் பெண்கள் அரைவாசிப் பேராக இருப்பதை நோக்கின் திருமணச் சந்தையில் பெண்கள் உரிய இடத்தைப் பிடித்துக் கொண்டு வருங்கால மாப்பிள்ளைகளிடமிருந்து சீதனம் கோரிப்பெறும் நாள் மிகத்தூரத்தில் இல்லை என்று சொல்லலாம்,

இக்காலத்தில் பெண்கள் மிகப்பெருமளவில் முன்னேறிவருகின்ருர்கள். கல்வி. விஞ்ஞானம் தொழில் நுட்பம், சமூகம், கலாசாரம் ஆகிய துறைகளிலே பெண்கள் சமஉரிமைகள் பெறுவதை பல நிறுவனங்கள் ஆதரித்துவருகின்றன. இதனுல் பெண்கள் மேன் மேலும் வேலைவாய்ப்புகளை பெறவும் பொருளாதாரத்தில் உறுதி நிலையடையவும் இயலுமாயிருப்பர் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. பெண்கள் சமமான பொருளாதார உறுதி நிலையைப் பெற்றுவிட்டால் உயிர் வாழ்வதற்கு அவர்கள் ஆண்களிலே தங்கியிருக்கும் நிலை நீங்கிவிடும்,

சீதனமுறை இயல்பாகவே செத்துமடிந்துவிடும் இக்காலச் சமுதாயம்பற்றியும் இக்கால உலகம்பற்றியும் புத்துணர்வுபெற்ற சிந்தனையோடு புதிய தலைமுறையினர் தோன்றுவர் அவர்கள் தமிழீழத்தில் எல்லோரையும் மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்ட குடிமக்களாக்குவார்கள்.

---

## மனித குலத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்த முயல்கின்ருர்கள் என்பது கேள்விக்குறியே!

மனிதகுலத்தினை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற பெரும் சவால்களுக்கு, உரிய தீர்வுகளை சமுதாயம், காலதாமதமின்றிக் கண்டறிந்து மக்களின் வளமான எதிர்கால வாழ்க்கைக்கு உதவவேண்டியது இக்காலகட்டத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடமையாகும் என்பதை நாம் இங்கு வலியுறுத்திக் கூறவிரும்புகின்ருேம்.

## பெண்கள் பற்றி காந்திஜீ

- ☐ அன்பையும் சகிப்புத்தன்மையையும், ஆண்களையும்விட பெண்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறேன்.
- ☐ தைரியம் ஆணின் ஏகபோகமல்ல, ஆணைப்போல் தனக்கும் சுதந்திரம் உண்டு என்பதைப் பெண்ணும் உணரவேண்டும்.
- ☐ வாழ்க்கையின் நியதி அஹிம்சை என்ருல் எதிர்காலம் பெண் இனத்தைச் சார்ந்தது.
- ☐ பெண்களுடைய உண்மையான ஆபரணம் அவளுடைய குணமும் தூய ஒழுக்கமும்தான்.
- ☐ அடிப்படையில் ஆணும் பெண்ணும் சமம் இருவரும் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவர்கள்.
- ☐ தானே அறிவில் சிறந்தவன் என்ற ஆணவம் கொண்டுள்ள ஆணின் அறிவைவிட பெண்ணின் உள்ளுணர்வே உண்மையானது என்று பலகாலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
- ☐ சேவை, தியாகம் ஆகியவற்றின் உயிருள்ள உருவமாகப் பெண் இனத்தை வழிபடுகிறேன்.
- ☐ ஆண் பெண் சேர்க்கையான தூண்டுதல் நல்லதே ஆனுல் அது படைப்புக்காகமட்டும்தான் வேறு எந்தவிதமான நோக்கத்திற்காக அது பயன்படுத்தப்பட்டாலும் கடவுளுக்கும் மனிதனுக்கும் ஆற்றும் பாவச்செயலாகும்.

தொகுப்பு:
வீ. தர்மினி.

---

## தளைகளை அறுத்துத் தரணியை ஆளுங்கள்

போகப் பொருட்களா
பெண்கள்
இல்லையில்லை
போசனைப பொருட்களா
அவர்கள்
இல்லவேயில்லை.
அவர்களும் மனிதர்கள்;
தங்கள் திறமைகளை
தங்கள் பெலவீனங்களை
தாங்களே அறிந்து அறிந்து
வீறுகொண்டெழுந்து
செயல்படாதவரை
பெண்கள் பெண்களே!

தென்மட்டுவில், சீனுச்சானு

---

தீர்க்கப்படாமல் இருக்கின்ற இப்பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதன்மூலம் மனிதகுலத்தினை அமைதியாகவும், சமாதானமாகவும் வாழச் செய்யமுடியும் என்ற எண்ணம் எல்லோர் மனங்களிலும் மூளைவிடவேண்டும். அவ்வாருன எண்ணம்—செயலாய் மாற்றம் பெறவேண்டும்.

# மனிதகுல மேம்பாட்டில் பெண்களின் பங்களிப்பு

—நீர்வை கணேஸ்

தனிமனித வாழ்விலும்சரி சமுதாய வளர்ச்சிப் பாதையிலும் சரி மனிதன் பெறும் வெற்றிகளுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ''பெண்'' என்பவள் காரணமாக இருந்துவருகிறள். பண்டைய இதிகாச காலத்திலிருந்து இன்றைய விடுதலைப் போராட்ட காலம்வரை பெண்ணின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது.

இன்று ஒரு ஆண் எதிர்நோக்கும் சகல பிரச்சனைகளுக்கும் பெண்ணும் முகம் கொடுக்கவேண்டியவளாக இருக்கின்ருள். இன்றைய காலகட்டத்தில் அது அவசியமானதும்கூட. மனித தேவைகள் வளர்ந்து கொண்டுபோகும் நிலையில் தனிய ஓர் ஆணிஞல் மட்டுமே தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுதல் இயலாத காரியம். குடும்ப வாழ்க்கைக்கும் பொதுவாழ்க்கைக்கும் இது பொருந்தும்.

''அடுப்பூதும் பெண்களிற்கு படிப்பெதற்கு'' என்ற காலம் இன்று மலையேறிவிட்டது. கல்வித்துறையிலும் நிர்வாகத்துறையிலும் அரசியல் துறையிலும் ஆண்களிற்கு சமமாக பெண்களும் பங்கேற்கும் காலமிது.

போர்க்காலத்தில் தாய்க் குலத்தின் பங்களிப்பு அபரிமிதமாக இருந்தது என்பதில் ஐயமில்லை. நமது பழைய காவியங்கள் இலக்கியங்களில் இதனை தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது,

ஏன் நம்முடைய இந்துமதம்கூட சிவம்+சக்தி இரண்டும் சேர்ந்தே பிரபஞ்ச இயக்கத்திற்கு காரணமாக சித்தரிக்கப்பட்டுள்ளதே தவிர தனியே சிவன் மட்டும் சித்தரிக்கவில்லை. உலக இயக்கத்திற்கு ஆண், பெண் என்ற இருவகைப்பட்ட சேர்க்கையே அவசியமாக இருக்கின்றது என்பதனை நாம் கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு பல வகையிலும் ஆணுடன் பிணைக்கப்பட்ட பெண்ணின் வாழ்க்கை சில சமயங்களில் ஆண்களின் சுயநலப் போக்கால் பெண்கள் வெறும் போகக் கருவிகளாக அடிமைகள்போல இருந்து வந்துள்ளனர். தற்பொழுது இந்நிலையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது என்பதனையும் மறுப்பதற்கில்லை. பாலிய விவாகம், விதைவைகள் மறுமணம் செய்ய முடியாமை, உடன்கட்டையேறுதல் போன்ற அக்கால சமூகக்கொடுமைகளால் பெண்கள் பாதிக்கப்பட்டது உண்மையே.

இன்று அத்தகைய தடைகளையெல்லாம் அறுத்தெறிந்து சமூகத்தில் கௌரவத்துடன் தலைநிமிர்ந்து நடக்கக்கூடிய ஒரு நிலையை பெண்ணினம் அடைந்துகொண்டிருக்கிறது என்பது பெருமைப்படத்தக்க விடயம்தான். இப்படியான அபிவிருத்திக்கு பாடுபட்ட சிறப்புக்கு உரிய பெரியோர்களே ஆணினத்தின் மறுவை துடைத்துள்ளார்கள்.

இன்றைய கட்டத்தில் நாட்டிற்கு நற்பெருமை தேடிக்கொடுத்தோர் வரிசையில் பெண்ணினமும் முதன்மைபெறுகிறது. அண்மையில் நடைபெற்ற சர்வதேச போட்டியில் பாரதத்திற்கு பெருமை தேடிக்கொடுத்தவர் வி. பி. உஷா என்றுல் போற்றத்தக்க விடயம்,

உலகில் வெற்றிக்கொடியை நிலைநாட்டி வரும் வீரர்களின் வாழ்விலே பெண்களின் பங்களிப்பும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமைந்திருக்கின்றது என்பதனை வரலாற்றை உணர்ந்தோர் வலியுறுத்துவர். மகாத்மாவின் வெற்றிக்கு ஒரு கஸ்தூரிபாய். நெல்சன் மண்டலாவின் வெற்றிக்கு வில்லி மண்டலா, எழுத்தாளனின் வெற்றிக்கு அவனின் காதலி காரணமாக இருக்கின்ருள். இவ்வாறு எந்தத் துறையை எடுத்து நோக்கினும் ஆண்களின் வாழ்க்கையின் சகல பருவத்திலும் சகலதுறைகளிலும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருக்கின்றது. தாயாக சகோதரியாக காதலியாக பெண்ணின் பங்களிப்பு பல்வேறு வகைகளில் மனித வாழ்வைச் சிறப்புறச் செய்கின்றன.

இவ்வகையில் மனித குருகுல மேம்பாட்டிற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் மனித நேய ஒருமைப்பாட்டிற்கும் அடிகோலிய பெண்ணினத் தொடர்புகள் பங்களிப்புக்களால் நம் சமூக கலாச்சார பாரம்பரிய தேவைகளில் பெண்கள் நமது பங்குகளை வழங்கவேண்டும்.

## பெண்களே உலகின்.........

( 2ம் பக்கத் தொடர்ச்சி )

பாரதிகண்ட புதுப்பெண்ணையும் இலக்கியம் தந்த இதிகாச நாயகிகளையும் நாம் புத்தகங்களில் வரலாறுகளில் படித்திருக்கின்ருேம். மேடைகளில் சமத்துவம். பத்திரிகைகளில் சமத்துவம். என்பதோடு பெண் அடிமை; மேம்பாடு போற்றப்பட்டு மறைகின்றது.

சமகால வாழ்வில் பெண் அடிமை சமநீதி போற்றப்படும் ஒரு காலத்தை இனியாவது படைப்பதற்கு ஆண்கள் உலகும் அறிவின் உலகும் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எனது எண்ணம். பேதமைகளை மறந்து பெண்களுக்குரிய உயரிய நீதியை அளிக்கும் சமுதாயத்தை கட்டி எழுப்புவோமாக.

''கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம்''
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

## சமத்துவ வழிபாட்டுக்கு 79 ஆலயங்கள் இணக்கம்
## 90 ஆலயங்கள் முடிவை மாற்றவில்லை

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க ஆலய பரிபாலகர்கள் தம் மனக் கதவுகளை திறந்துகொண்டது காரணமாக யாழ் மாவட்டத்தில் கடந்த ஆறு வாரங்களுக்கிடையில் 79 சைவ ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்கு அனுமதி வழங்கியுள்ளன.

இந்த ஆலயங்கள் யாவும் எத்தகைய பிரச்சனைக்கும் இடம் இல்லாத முறையில் சுமுகமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அறவழிப் போராட்டக்குழு கடந்த ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி நடத்திய தனதுசமூக— சகோதரத்துவ சமரச மகாநாட்டில் மொத்தம் 169 ஆலயங்கள் சமத்துவ வழிபாட்டுக்குத் தடையாக உள்ளன என்பதை அவற்றின் பெயர்களுடன் வெளியிட்டு அக்டோபர் 15ம் திகதிக்கிடையில் சகல ஆலயங்களும் திறந்துவிடல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தது. வீரகேசரி, 14—10—1980.

# மாதவம் செய்தவள் மயங்குவது ஏன்?

— ஜ். எஸ். தேவி

''மங்கையராகப் பிறந்திட மாதவம் செய்திடவேண்டும்'' என்று புரட்சிக்கவிஞன் பாரதி பாடினுன். ஆனுல் சமுதாய கண்ணுேட்டத்தில் பெண்களின் நிலே என்ன? என்பது தான் கேள்விக்குறி. குடும்பப் பெண்கள் எல்லோரும் பல்வேறுபட்ட பிரச்சனேகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிருர்கள். இவள் பெண் இன்னெருத்தர் வீட்டுக்கு போகவேண்டியவள் தானே! என்ற அடிமைத்தனமான முறையால் வளர்க்கப்படுகிருள். நாட்டுப்புறங்களில் சரி நாகரீகம் வளர்ச்சியுற்ற இடங்களிலும் சரி சிறுமியில் இருந்து அவள் பெரியவள் ஆகும்வரை அப்படிச்செய் இப்படிச்செய் பின் நல்லாய் புருஷன் வீட்டில் வேண்டிக் கட்டுவாய் இப்படி அவள் ஆரம்பகால வாழ்வில் இருந்தே ஒருவித நச்சரிப்புத் தன்மைக்கு தள்ளப்படுகிருள். இனி இவள் வளர்ந்து சீதனம் கொடுத்து கலியாணம் செய்து கொடுக்கவேணும். இப்படி பெண் என்ருலே பிரச்சனேக்குரிய விடயமாகவே சமுதாயத்தில் ஊறிப்போய் விட்டது.

இன்றைய பெண்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனே சீதனம்தான். வளர்ந்து கடா மாதிரி ஆண்களே வளர்த்து வீடு. காணி, பூமி நகை என பேரம் பேச பொருளாதார செல்வாக்கு உள்ளவர்கள் விலே கொடுத்து வாங்க ஏனேயோர் பெருமூச்சு விட்டு வீட்டு ஜன்னல் கம்பிகளே பிடித்தபடி இருக்கவே காலம் சரியாக இருக்கிறது. மேடைக்கு மேடை சந்தித்துச் சந்தி சீதனத்தை ஒழிக்கவேண்டும் என்று பேசினுல் போதாது. எனது இலட்சியம் சீதனம் வேண்டுவது இல்லே என பேசிக் கொள்வார்கள்: கலியாணம் என்று வந்ததும் எனக்கு விருப்பம் இல்லேத்தான் அம்மா அப்பா விட்டாால்தானே என அவர்கள்மேல் பழியை போட்டுவிடுவார்கள். இத்தகைய நிலே மாறி பெண் என்ருல் மதிப்புக்குரிய ஒருதாய் என மாறுதல்வேண்டும், இன்று ஆண்சகோதரர்கள் வெளிநாடு சென்று அடிமையாக வாழ்ந்து உழைப்பது அக்காவை தங்கையை வாழவைக்க வீடுவாசல் சூசு பணம் நகை நட்டு தேடத்தான் என்பது மறுக்கமுடியாத உண்மை. அந்தளவிற்கு சமுதாயத்தில் சீதனம் வேரூன்றி வளர்ந்துவிட்டது.

பொதுவாக ஒரு சமுதாய வளர்ச்சிக்கு பெண்கள்தான் முக்கிய பங்கு வகிக்கிருர்கள், ஒரு குடும்பம் சிறக்க ஒரு பெண் எல்லாவிதத்திலும் உழைக்கிருள். பல குடும்பங்கள் சமுதாயம் மாறி நாடே சிறக்க பெண்கள்தான் காரணம். மாவீரன் சிவாஜி வளர்ச்சிக்கு யார் காரணம்! ஒருதாய் தானே. இதிகாசங்களே சரி புராணங்களேச்சரி எடுத்து நோக்கினுல் பெண், என்னவள்தான் அது சிறப்புடையவோ அன்றிக் குன்றக்கூட காரணமாக இருக்கிருள். ஆனுல் இன்று மடியில் வைத்து குழந்தைக்கு நல்ல கதை சொல்வோம் என்ருல் மேலே வெடிச்சத்தம் படபடவென வெடிக்கும் ஓசை! காலேயில் சென்ற மகன் வீடு வரும்வரை அவள் மனம் படும்பாடு பொதுவாக இன்று நாட்டில் இருக்கும் அமைதியற்ற பிரச்சனே பெண்களே பொறுத்தவரை மிகவும் இக்கட்டான சூழ்நிலேயே ஏற்படுத்துகின்றது. இந்நிலே மாறி அமைதியான சூழலில் நாடு செழிக்கவேணும். பெட்டைகோழிகூவியாவிடியப்போகிறதுஎன்ற நிலேமாறி பெண் என்பவள் பிரச்சனேகளே தமக்குள் தாமே போடும் அடிமை விலங்குகளே உடைத்து இவள் அல்லவா பெண் என்று சுட்டி காட்டப்படும் நிலேயை ஏற்படுத்த வேண்டும். பெண்களே அடுத்தவர்களே அதே இனத்தை குறை கூறி தாழ்த்தும் காலம் மாற்றி தம்மை சுற்றி உள்ள பிரச்சனேகளுக்கு முகம் கொடுத்து வாழமுற்படுவதே இன்றைய பெண்கள் செய்யவேண்டிய கடமைகளாகும்.

## ஆண்டவனே அறிவதே அகிம்சை

ஆண்டவன் எங்கேயோ வானத்தில் இருந்துகொண்டு ஆட்சிபுரியவில்லே. நமக்குள் மறைந்து நிற்கிருன். நம்முடைய ஊனுக்குள் உயிருக்குள் அந்தரங்கமாக இருக்கிருன். நமக்குள் நாம் காணுத சக்தி எவ்வளவோ இருக்கிறது. ஆராய்ச்சியும், முயற்சியும் இடைவிடாது செய்து வந்தால் நமக்குள் இருக்கும் சக்தியை நாம் காண்கிருேம். அப்படியே நமக்குள் இருக்கும் ஆண்டவனேயும் கண்டுகொள்ளலாம். அதற்கு வைராக்கியமும் விடாமுயற்சியும் வேண்டும்.

நமக்குள் குடியிருக்கும் தெய்வத்தைக் காண்பதற்குப் பல துறைகள் உண்டு. அவற்றில் அகிம்சை ஒரு துறை. ஈசன் நமக்குள் இருக்கிருன். எல்லா உயிரும் பகவான் சொரூபமே என்பதை உணரவேண்டும். அதுவே அகிம்சை. — காந்திவசன மஞ்சரி

# மகளிர் எதிர்காலச் சிறப்புற வேண்டும்

—திருமதி பொ. புவனேஸ்வரி

வளர்ந்துவரும் மனித சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதர்க்கும் எதிர்காலத்தில் விசேடமான பொறுப்புக்களும் சிறப்புக்களும் இருக்கும் என்றால் தமிழ் மகளிரைப் பொறுத்தவரையில் அவர்க்குள்ள பொறுப்புக்கள் மிகப்பெறுமதியானவை அதே சமயம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சிறப்பும் மகிமைவாய்ந்ததாகவே இருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

நீண்ட சிறந்து பாரம்பரியத்தை உடையதமிழ்ச் சமுதாயத்துக்குரிய சிறப்புக்களில் பெரும்பாலானவற்றுக்கு நேரடியான மகளிர் பங்களிப்பும் பெரும்பாலானவற்றுக்கு மறைமுகமான அடிப்படைப் பங்களிப்பும் உண்டு. இப்படியான பங்களிப்புக்களைத் தொடர்ந்தும், காலத்தின் போக்குக்கும் தேவைக்கும் பெண்ணினம் வழங்குவதாலேயே தமிழ்ச்சமூதாயமும் தமிழ்ப்பெண்களும் மேன்மையுறமுடியும்.

தமிழ்ப்பண்பாடு என்று புகழப்படும் பல தமிழியல்புகள் விசேடமாக மொழிப்பற்று இனப்பற்று என்பன தமிழ்மக்களிடையே மேன்மையுறப் பெண்ணினமே காரணமாக இருக்கவேண்டும்.

'வீரத்தாய்' என்ற கணிப்பில் புகழப்படுகின்ற தமிழ்ப்பெண் எவ்வாறு தன் கணவன் சகோதரன் மகன் என்னும் எல்லோரும் வீரர்களாக விளங்கக் காரணமாக இருந்தாளோ அவ்வாறே நம் தமிழ்ச்சமுதாயத்தில் கல்வியிலும் ஆற்றலிலும் வீரத்திலும் மேன்மையில் சிறப்புப்பெற்று விளங்கியவர்களுக்கெல்லாம் அவர்களின் தாயார் சகோதரியர் போன்றோரின் தூண்டுதல்—முன்மாதிரி என்பனவே காரணமாக இருந்திருக்கின்றது. இராஜராஜசோழன் சோழப் பேரரசை நிறுவி நிலைத்தபுகழைப் பெற்றதற்கு அவனின் சகோதரி குந்தவை என்பாளே பெரும் பங்களிப்பு என்பர். இதே போல பல குடும்பங்கள் கொடையிலும் பிறகருமங்களிலும் புகழ்பூத்து விளங்க அந்தக் குடும்பத் தாய்க்குலமே காரணமாகவே இருந்திருக்கின்றது.

இந்த அடிப்படையில் நம்மவர்க்கு மொழிப்பற்று, இனப்பற்று, வீரம், ஆற்றல், சுறுசுறுப்பு முதலிய பண்புகள் எதிர்காலத்தில் மேலோங்க நம் தமிழ் மகளிரே காரணமாக இருந்திடவேண்டும்.

நம் சமூகத்தில் பெண்களுக்குக் கொடுமை இழைக்கப்படும் தன்மை பெரும்பாலும் குறைந்துவிட்டது என்றே சொல்லலாம், உணவு, உடை, உத்தியோகம் முதலியவற்றை பெண்கள் அடைவதற்குத் தடையாயிருந்த சமுகவிரோத இயல்புகள் அற்றுவிட்டன, இன்று இப்படியானவற்றை பெறுவதற்கு ஆண்பெண் என்ற பேதமற்ற போட்டியும் சந்தர்ப்பக்குறைவுமே உள்ளன என்று சொல்லலாம். இந்நிலையில் பெண்கள் பொறுமை என்றும் அணியணிந்து தம்பங்களிப்பினை எமது சமகால சந்ததியினர்க்கு வழங்குவதின்மூலம் ஒரு தலைசிறந்த எதிர்காலத்தை உருவாக்க மூல காரணிகளாய் விளங்க முடியும்.

# அணி திரள்வோம்

நாங்கள்
நடைப்பிணங்கள்
உயிருள்ள ஜடங்கள்தான்
ஆனால்
பிணங்களாக விருந்தாலும்
எங்களை வைத்து
பணம் சம்பாதிக்கும்
பலர் உண்டு
பாரினிலே

சினிமா முதல்
அரசியல் வரையிலும்
எங்கள் ஆதிக்கம்தான்
நாங்கள் அங்கே
ஆதிக்கம் செலுத்தவில்லை
அவர்கள் தான்
எம்மை ஆதிக்கம்
செய்ய வைத்துள்ளார்கள்.
அதனால்தான்
அவர்கள்
வாழ்கிறார்கள்
வளர்கிறார்கள்.

ஆனால்
நாங்களோ இன்னும்
வளரவில்லையென்றாலும்
வாழ்ந்து கொண்டுதானிருக்கிறோம்
நடைப்பிணங்களாக
உயிருள்ள ஜடங்களாக
ஆண்கள் பலர்
அம்மா. .
அக்கா
தங்கை, மனைவி
என மேற்கோள் காட்டி
உறவு கொண்டாடுவர்
பாசம் கொள்வர்:

ஆனால்
கலியாணம் காட்சியென்று
வந்தால்
சீதனம், இனம்
அது இது என்றெல்லாம்
எம்மிடம் கேட்பார்கள்.

குமருகள்
வீட்டுக்குள்ளயிருந்து
பெருமூச்சு விடுகுதுகள்
அதுதான்
உன்ரை குடும்பத்திற்கு
தரித்திரம் பிடிச்சிட்டுது
இப்படி
எல்லோரும் பேசுவது வழக்கம்
ஆனால்
எம்மை கரைசேர்க்க
ஒருவரில்லை— அதனால்
எங்கள் பிரச்சனையை தீர்க்க
நாமே
அணிதிரள்வோம்.

—வனிதா

# பெண்கள் ஆண்களைவிட....

( 4-ம் பக்கத் தொடர்ச்சி )

ஆண்களைவிடப் பெண்கள் பலவீனமானவர்கள் என்ற கருத்துத் தோற்றத்தின்மூலம் பெண்கள் ஆண்களைவிட குறைவான வேலைகளையே செய்கிறார்கள் என்ற பொய்ம்மைத் தோற்றப்பாடும் ஏற்படுத்தப்படுகிறது.

ஒரு நிலத்தில் வேலைசெய்யும் உழைப்பாளி மக்கள் மத்தியில் ஆண்களிடமிருந்து பெறப்படும் உழைப்புக்குச் சமமான உழைப்பு பெண்களிடமிருந்து தந்திரோபாய யுத்திகளின்மூலம் பெறப்பட்டுவிடும். ஆனால் உழைப்பிற்கான கூலியினை வழங்கும்போது ஆண்களைவிடப் பெண்களிற்குக் குறைந்த கூலியே வழங்கப்படும். ஆண்களைவிட பெண்கள் குறைவான உழைப்பிலேயே ஈடுபடுகின்றார்கள் என்ற அந்தப் பொய்ம்மையான காரணமும் பயன்படுத்தப்படும். சாதாரணமாக உழைப்பாளி மக்களைச் சுரண்டிவாழும் நிலப்பிரபுக்கள் பெண் உழைப்பாளிகளின் கூலியை குறைப்பதன்மூலமாக அவர்களை மேலும் நன்றாகவே சுரண்டிக்கொள்கிறார்கள்- எனவே இதன்மூலம் ஒரு சுரண்டல் அமைப்பில் மிக மிக அதிகமான சுரண்டலிற்கு பெண் உட்படுகிறாள்.

காலாதி காலமாக, பாரம்பரியமாக பெண்களிடம் உளவியல்ரீதியில் நிலைபெற்று வந்துள்ள இந்தப் பெண்கள் ஆண்களைவிடப் பலவீனமானவர்கள் என்ற கருத்து இன்றும் நிலைபெற்றுக்கொண்டு இருப்பதனால் இங்கும் பெண்களின் உழைப்பு சுலபமாக சுரண்டப்படுவதற்கு தடையேதும் இல்லை.

எனவே, நாம்: பெண்கள் ஆண்களைவிட இயற்கையிலே பலவீனமானவர்கள் அல்லர் என்ற ஆணித்தரமான உண்மையை இப்போது அறியக்கூடியதாக உள்ளது.

இவ்ஆய்வினை மறுதலிப்பதற்காகச் சிலர் பின்வருமாறும் கூறலாம். அதாவது ''உணவினை அதிகமாக உண்ணுகின்ற உடற்பருமனான பெண்களும் இன்று நம் மத்தியில் உள்ளவர்களே, இவர்களால் ஏன் ஆண்களிற்குச் சமமான முறையில் கடினமான வேலைகளைச் செய்ய முடிவதில்லை என்று கேட்கலாம். நாம் ஏற்கனவே பார்த்திருப்பதுபோல காலாதி காலமாக ஊறிவந்த பெண்கள் பலவீனமானவர்கள் என்ற அந்தக் கருத்து பரவலாக எல்லாப் பெண்களின் உள்ளங்களையுமே பிடித்துள்ளது. எனவே இவர்கள் மனோதிட்டத்தையும் இழந்த நிலையிலேயே உள்ளனர். உடற்பருமனான (உடல் வலிமையுள்ள) பெண்ணாக இருந்தாலும் அவர்களிடம் மனோவலிமை இல்லாதிருப்பதால் அவர்களால் ஆண்களைப்போன்ற கடினமான வேலைகளைச் செய்ய முடிவதில்லை. இவர்கள் சுயநம்பிக்கை கொண்டு மனது வைத்தால் எந்தக்கடினமான காரியத்தையும் இவர்களால் செய்ய முடியும்.

ஒரு காரியத்தை தன்னால் செய்து முடிக்கமுடியும் என்று ஒருவன் உறுதியாக நினைத்தானாகில் அவனால் அவன் காரியம் நிச்சயம் செய்துமுடிக்கப் பட்டுவிடும். ஆனால் அதே காரியத்தை தான் செய்ய இயலாது என்று அவன் நினைத்தால் அவனால் அது செய்து முடிக்கப்படாத காரியமாகிவிடும். இது மனிதனின் மனோவியலில் தங்கியுள்ள ஒரு இயல்பு. எனவே ஒரு கடினமான காரியத்தை செய்து முடிக்க மனிதர்களிற்கு உடல் வலிமையுடன் மனோவலிமையும் தேவைப்படுகின்றது.

பெண்கள் தம் உடல் வலிமை, மனோவலிமை என்பவற்றைப் பெருக்கிக்கொள்வதன்மூலம் தாங்கள் இயற்கையிலேயே பலவீனமாளவர்கள் அல்லர் என்பதனை நிருபிக்கமுடியும்.

---

## தமிழ் மகளிருக்குத்... ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ் ஒன்றில் சீக்கோ கட்டிய வாலிபர்கள் சீற்றில் இருக்கச் சில பெண்கள் மிதிபலகையில் பிரயாணம் செய்ததை நான் ஒவ்வொருநாளும் அவதானித்தேன்,

பெண்களை பிழையான முறையில் வழிகாட்டும் பல ஆடவர்களை நகரத்தில் காணமுடியும். வெளிநாட்டில் பணிப்பெண் வாழ்வுக்குச் சென்று பற்பல கஷ்டங்களை மாதர் அடைகின்றனர். இதில் தமிழ்ப்பெண்களின் தொகை சொற்பமாயிருந்தாலும் அவர்களுள் பலர் லெபனான், ஓமான், சவுதியில் படும் துன்பங்கள் பல,சிங்கப்பூர் பிரதமர் வீட்டில் மனைவி இருக்க ஆண்மகன் பல ஆசைநாயகிகளை வைத்திருக்கலாம் எனக் கூறியுள்ளார். இவை எல்லாம் எமது நாட்டுக்கு வெளியே இருக்கும் கலாச்சார சீரழிவுகளே.

நிறுவப்படக் கூடிய விழிப்புக்குழுக்கள் தமிழ் மகளிருக்கு கலங்கரை விளக்கமாக நின்று ஆலோசனை மாத்திரமன்றி அறிவுரை தருவதுமன்றிப் போராட்டங்களை நெறிப்படுத்தலாம்.

எனவே இந்தப் புனித மண்ணில் எதிர்காலப் போராட்டத்தில் ஒருகை மகளிர்க்கே. ஒருகை ஓசை எழுப்பமாட்டாது. அந்தக் கை நம்பிக்கை என்ற இன்னொரு கையுடன் செயற்பட்டால் எத்தனையோ வழிமுறைகள் தமிழ்மகளிருக்கு வெளிப்படும்.

---

## அறவழி சிறுவர் கழகம்

அறவழிப் பாலர் பாடசாலைகள் நடைபெறும் கிராமங்களில் இருக்கின்ற சிறுவர்களை இணைத்து அறவழி சிறுவர் கழகம் எனும் பெயரில் புதியதோர் அமைப்பினை அறவழிப்போராட்டக்குழு அமைத்துவருகின்றது.

இதுவரை சுமார் பத்துக்குமேலான கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும்,ஏனைய கழகங்கள் அமைக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் சிறுவர் கழக இயக்குனர் திரு. ஏ. பேரம்பலம் தெரிவித்துள்ளார்.

# "அறவழி பாடசாலைகளின் வளர்ச்சி திருப்தியளிக்கின்றது"

யாழ். மாவட்டத்தில் இன்று நடாத்தப்பட்டு வருகின்ற பாலர் பாடசாலைத் திட்டங்களில் அறவழிப் போராட்டக்குழுவினரால் நடாத்தப்படுகின்ற பாலர் பாடசாலைகள் மிகவும் நல்லமுறையில் திட்டமிட்டு நடாத்தப்பட்டுவருவது கண்டு, எம்மத்தியில் வாழ்கின்ற கல்வியாளர்கள் அனைவரும் திருப்தியடைகின்றனர் என்பதை நான் அனுபவரீதியாகக் கண்டு வருகின்றேன். இவர்களின் பணிகள் மென்மேலும் வளர நாம் எம்மாலான ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்கவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. தங்கராசா, இம்மாதம் 8ம்திகதி சரசாலையில் அறவழி தூலகத்தினை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

சரசாலை அறவழிப் பாலர்பாடசாலை அபிவிருத்திச் சபைத்தலைவர், அதிபர் எஸ். சக்திவேல் தலைமையில் நடைபெற்ற நூலகத்திறப்பு விழாவின்போது, திருவாளர்கள் வீ. எஸ். துரைராசா (கல்வி இயக்குனர்) எஸ். தங்கராசா (கலை, கலாச்சார இயக்குனர்) க. ஜீவகதாஸ் (செயலாளர்) ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

தலைவர் திரு. சக்திவேல் தனது தலைமையுரையின்போது "சரசாலை கிராமத்தில் அறவழிப் பாலர் பாடசாலை ஆரம்பித்த காலம் முதல், இக்கிராமத்தில் இருக்கின்ற சிறுவர்கள். பெரியோர் மத்தியில் நல்லதொரு எழுச்சியும், மாற்றமும் ஏற்பட்டு வருவது காணக்கூடியதாகவுள்ளது" என்றார்.

பாலர்கள், பெற்றார், நலன்விரும்பிகள் தொகையாகப் பங்குகொண்ட இவ்வைபவத்தில் அறவழிப் போராட்டக்குழு அறவழி நூலகத்திற்குத் தேவையான 150 பயன் தரும் நூல்களை அன்பளிப்பு செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டத்தில் மேலும் திருவாளர்கள் சே சரவணமுத்து, அ. சம்புலிங்கம் ஆகியோரும் பேசினர்.

ஆசிரியை செல்வி இ. சத்தியலோஜினி நன்றி கூறினர்,

---

**பாலர் கல்வியில்**
**ஆக்கப்பொருள் சாதனம்**

## பொருட்காட்சி

**காலம்: 24, 25, சித்திரை 1987**


**இடம்: டிறிபேக்கல்லூரி,**
**சாவகச்சேரி.**

அறவழி பாலர் பாடசாலைகளின் பங்களிப்புக்களை கண்டு மகிழ வாரீர்!

ஊக்குவிப்பு: பெரியோர் ரூபா 2-00

சிறியோர் ரூபா 1-00

---



"நம்முடைய ஆசைகளைக் குறைத்துக் கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நமது கடமை"

—மகாத்மா காந்தி.

"உள்ளூர் மூலப்பொருட்களை
உற்பத்திக்கெடுப்போம்
உள்ளூர் உற்பத்திப்பொருட்களுக்கு
ஆதரவு கொடுப்போம்.

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார் சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற்சோப் மேலுறைகளை

அனுப்பி விவசாய மலர்— மில்க்வைற் செய்தி இதழ் 135 ஐ பெற்றுக்கொள்ளுங்கள்.

## மில்க்வைற்-யாழ்ப்பாணம்

தொலைபேசி — 23233.

---

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினால், யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 பங்குனி 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.